# பண்டார சாத்திரங்களில் ‘சிவானந்தம்’ எனும் பதமும் பொருளமைதியும்

## Name And Meaning of Sivanandha in Bandara Satras

**சா.சிவானந்தம்,** இளம் கல்வியியல் இரண்டாமாண்டு, தமிழ்த்துறை,

டாக்டர்.ஜி.ஆர்.தாமோதரன் கல்வியியல் கல்லூரி, கோவை – 641042.

**S.Sivanantham,** B.Ed Second Year, Department of Tamil,

Dr.G.R.Damodaran College of Education, Coimbatore – 641042.

ORCID: https://orcid.org/0009-0001-6167-1217

**DOI: 10.5281/zenodo.10991402**

**Abstract**

The Literatures are the ones that refine the Human Life. These Literatures have appeared in Tamil Language in various forms. Thus, Devotional Literature forms one of these types of Literature. These Literatures originated and developed during the Pallava Period. Devotional Literature not only teaches man virtues and virtues but also expounds Theological principles and Philosophical principles. The discipline of worship is followed when explaining theology. Philosophical principles lead us to think about yogic posture and health. One of the components of such a philosophy is the Bandara Satras. The Bandara Satra texts are composed by the monks in the monasteries. This review article examines the meaning and significance of the word Sivananda in these Bandara Satras.

**ஆய்வுச்சுருக்கம்**

மனித வாழ்வினைச் செம்மைப்படுத்துவதாகத் திகழ்வது இலக்கியங்கள் ஆகும். இந்த இலக்கியங்கள் தமிழ்மொழியில் பலவகையாகத் தோன்றியுள்ளன. அந்த வகையில் இந்த இலக்கிய வகைகளில் ஒன்றாக அமைவது பக்தி இலக்கியங்கள் ஆகும். இவ்விலக்கியங்கள் பல்லவர் காலத்தில் உருப்பெற்று வளர்ச்சி பெற்றன. பக்தி இலக்கியங்கள் மனிதனுக்கு அறங்கள் மற்றும் நல்லொழுக்கங்களைக் கற்றுக்கொடுப்பதோடு மட்டுமல்லாது இறையியல் மாண்புகளையும் மெய்யியல் கொள்கைகளையும் விளக்குவதாக அமைகின்றன. இறையியல் மாண்புகளை விளக்கும்போது வழிபடுதல் எனும் ஒழுங்குமுறை கடைப்பிடிக்கப்படுகிறது. மெய்யியல் கொள்கைகள் எனும்போது யோக நிலை மற்றும் உடல்நலம் பற்றி சிந்திக்கச் செய்கிறது. இத்தகைய மெய்யியல் கொள்கையின் உட்கூறுகளில் ஒன்றாக அமைவது பண்டார சாத்திரங்கள் ஆகும். பண்டார சாத்திர நூல்கள் மடங்களில் உள்ள ஆதீனங்களால் இயற்றப்படுவது ஆகும். இந்தப் பண்டார சாத்திரங்களில் ‘சிவானந்தம்’ எனும் பதமும்

பொருளமதியும் எனும் பொருண்மையை ஆராய்ந்துரைப்பதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகின்றது.

Key Words : சைவ சித்தாந்தம், சாத்திரம், பேரானந்தம், இலக்கியம், ஆதீனம், திருமுறைகள், முத்தி, பஞ்சாக்கரம், Saiva Sithanda, Pallavas, Literature, Philosophy, Human, Principles, Five Letter Mandra, Sivananda.

**முன்னுரை**

மனித வாழ்வைச் சரியான நெறியில் கொண்டு செல்வது இறையியல் மாண்புகள் ஆகும். இந்த இறையியல் மாண்புகளை எடுத்து விளக்கி, பேரின்ப நிலைக்கு அழைத்துச் செல்லும் இலக்கியங்களாக பக்தி இலக்கியங்கள் திகழ்கின்றன. இவ்விலக்கியங்கள் சாத்திரங்கள், தோத்திரங்கள் என்று இரண்டு வகையாகப் பகுக்கப்பட்டுள்ளன. சாத்திரம் என்பது மெய்யியல் கொள்கைகளையும், தோத்திரம் என்பது இறையியல் அனுபவப் பாடல்களையும் உள்ளடக்கியதாக அமைகின்றது. இவற்றுள் சாத்திர நூல்களை மையமாகக் கொண்டு அமைவது பண்டார சாத்திரங்கள் ஆகும். இந்தப் பண்டார சாத்திரங்களில் ‘சிவானந்தம்’ எனும் சொல்லையும் அந்தச் சொல் தரும் பொருளையும் குறித்து ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**பண்டார சாத்திரங்கள்**

சைவ சமயத்தினுடைய தத்துவக் கருத்துகளை உள்ளடக்கியவை சாத்திர நூல்கள் என வழங்கப்படுகின்றன. இந்நூல்களை இயற்றியவர்கள் சந்தானக் குரவர்கள் ஆவார்கள். சந்தானக் குரவர்களின் சாத்திர நூலில் அமைந்துள்ள மெய்யியல் கருத்துகளைக் கூறி வந்தவர்கள் 'பண்டாரம்' என்ற பெயரால் அழைக்கப்பட்டனர். இவர்கள் சைவ சித்தாந்த சாத்திரங்களைப் பயின்று, அனுபவித்த நிலையினை நூல்களாக இயற்றினர். இந்த நூல்களே ‘பண்டார சாத்திரங்கள்’ என்று அழைக்கப்படுகின்றன. அந்த வகையில் திருவாவடுதுறை ஆதீனம் பத்தொன்பது நூல்களையும், தருமபுர ஆதீனம் எட்டு நூல்களையும் கொண்டுள்ளன.

**சிவானந்தம் – பொருள்**

சிவபெருமானின் மகிழ்ச்சியான மனநிலையைக் குறிப்பது சிவானந்தம் ஆகும். மேலும், சிற்றறிவுடைய சீவான்மாப் பேரறிவுடைய பரமான்மாவோடு கூடுகின்ற பொழுது, தெவிட்டாத பேரின்பமும், அனுபவிக்க அனுபவிக்க குறையாத ஆனந்தமும், நிலைபேறான உண்மையின்பமும் உண்டாகும். இந்த நிலையே சிவானந்தம் ஆகும். அதாவது, ஆன்மா பரம்பொருளோடு ஒன்றி இருக்கும் நிலையை உணர்த்துவது ஆகும்.

**இலக்கணப் பொருண்மையில் சிவானந்தம்**

நிலைமொழியின் இறுதியில் அகரம் அல்லது ஆகாரம் வந்து, வருமொழி முதலில் ஆகாரம் வந்தால் இரண்டும் கெட்டு ஒரு ஆகாரம் தோன்றும். இது **தீர்க்க சந்தி** என்று

அழைக்கப்படுகிறது. இது வடமொழி இலக்கணம் ஆகும். **(நன்னூல். எழுத்ததிகாரம். சோம.இளவரசு. உரை பக்க எண்.170)** இந்த விதிப்படி, சிவானந்தம் எனும் சொல், **சிவ+ஆனந்தம்** என்று பிரிந்து பொருளினை உரைக்கின்றது.

சிவானந்தம் எனும் சொல்லின் இலக்கணக்குறிப்பு, **ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகையும்** ஆகும். அதாவது வேற்றுமை உருபுகள் எட்டு வகைப்படும். அவற்றுள் ஏழாம் வேற்றுமை உருபு **கண்** எனப்படும். இதை,

**"ஏழாகு வதே**

**கண்ணெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி**

**வினைசெய் இடத்தின் நிலத்தின் காலத்தின்"**

**(தொல்காப்பியம் சொல்லதிகாரம் நூற்பா எண். 82)**

எனும் நூற்பாவில் தொல்காப்பியர் கூறுகின்றார்.

அந்த வகையில் இவ்வுருபு அமைய, சிவத்தின் கண் உள்ள ஆனந்தம் என்று பொருள் கொண்டால், பரம்பொருளாகிய சிவபெருமானிடம் இருக்கும் ஆனந்தம் என்பது பொருளாக அமைவதைக் காணலாம்.

**தசகாரியம்**

திருவாவடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்த சிதம்பரநாததேசிகர் என்பவரால் இயற்றப்பட்டது தசகாரியம் எனும் இந்நூல் ஆகும். இந்நூல் பரம்பொருளான சிவபெருமானின் தத்துவ ரூபம், தத்துவ தரிசனம், தத்துவ சுத்தி, சிவ ரூபம், சிவ தரிசனம் மற்றும் ஆன்மாவின் ரூபம், ஆன்ம தரிசனம் ஆகியவற்றை விளக்குவதாக அமைகின்றது.

சிவானந்தம் அறிவு நிலையில் இருந்து உலகம் முழுதும் பரவிக் காணப்படுகின்றது எனவும், அதனை அடைய வேண்டும் எனில், பரம்பொருளை நினைத்து யோக நிலைக்குச் செல்ல வேண்டும் என்றும்,

**"எங்கும் அறிவாய் எழுந்தசிவா னந்தத்தைத்**

**தங்குநய னத்தடக்கித் தான்விழிக்கப் – பங்கமுறக்**

**கற்குநிட்டை யாகுங் கருதியறி வாய்நிறைந்து**

**நிற்குநிட்டை யல்லவென நில்"** **(தசகாரியம் பாடல் எண்.19)**

எனும் இப்பாடல் கூறுகின்றது. எனவே, பரம்பொருளாகிய சிவபெருமான் அறிவு நிலையில் எங்கும் காணப்படுகின்றார் என்று, சிவானந்தம் எனும் சொல் மூலமாக உணர முடிகின்றது.

**முத்தி பஞ்சாக்கர மாலை**

திருவாவடுதுறை ஆதீனத்துப் பண்டார சாத்திரங்களுள் ஒன்று முத்தி பஞ்சாக்கர மாலை ஆகும். இந்நூல் பஞ்சாக்கர மந்திரமான 'சிவாயநம' என்பதைப் புகழ்ந்து பாடுவதாக அமைகிறது. தூல பஞ்சாக்கரம், சூக்கும பஞ்சாக்கரம் என்ற இரண்டு பகுப்புகளைக் கொண்டது. திருவாவடுதுறை ஆதீனத்தின் ஆதி குருமுதல்வரான 'நமசிவாய மூர்த்தி' என்பவரைப் போற்றிப் பாடுவதாகவும் விளங்குகின்றது.

இங்கு சிவானந்தம் எனும் சொல், நமசிவாய மூர்த்திகளின் ஆனந்த நிலையை உணர்த்துவதாக அமைகின்றது. இதை,

**"திருவேயென் செல்வச் சிறப்பே சிவானந்தத் தெள்ளமுத**
**வுருவே யுருவமு மூருடன் பேருமொன் றும்புணரா**
**வருவே தெளிந்த வறிவேமெய் யன்பர்க் கருளுந்தெய்வத்**
**தருவேதென் கோமுத்தி முத்திபஞ் சாக்கர சற்குருவே"**

**(முத்தி பஞ்சாக்கர மாலை பாடல் எண்.1)**

எனும் பாடல் எடுத்தியம்புகின்றது. எனவே, நமசிவாய மூர்த்திகள் பரம்பொருளான சிவபெருமானுடைய திருவடிகளைப் பற்றிக் கொண்டார் என்பதை, சிவானந்தம் எனும் சொல் மூலமாக அறிய முடிகின்றது.

**பஞ்சாக்கர தேசிகர் மாலை**

திருவாவடுதுறை ஆதீனத்து ஆதி குரு முதல்வர் நமசிவாய மூர்த்திகளைப் போற்றி, மாதவச் சிவஞான சுவாமிகளால் அருளிச் செய்யப்பட்டது பஞ்சாக்கர தேசிகர் மாலை ஆகும். பஞ்சாக்கர மந்திரத்தை உச்சரித்து, சிவபெருமான் திருவருளில் கலந்த நமசிவாய மூர்த்திகளின் பெருமையைப் பாடுவதால் இந்நூல் இப்பெயர் பெற்றது.

நமசிவாய மூர்த்திகள், சிவஞான சுவாமிகளுக்குச் சிவானந்தமாக வெளிப்படுகின்றார். இதை,

**"அறிவே யருட்செல்வ மேநிறை வேயர சேயடியா**
**ருறவேயென் னாருயி ரேமணி யேயுரு காதநெஞ்சிற்**
**பிறிவே துரியங் கடந்த சிவானந்தப் பேரமுதச்**
**செறிவே கருணைப் பிழம்பேபஞ் சாக்கர தேசிகனே"**

**(பஞ்சாக்கர தேசிகர் மாலை பாடல் எண்.1)**

எனும் பாடலில் கூறுகின்றார். பஞ்ச அவத்தைகளில் ஒன்றான துரியம் என்ற நிலையைக் கடந்து, பேரமுதமாக மூர்த்திகள் விளங்குகின்றார் என்பதை, சிவானந்தம் என்ற சொல் உணர்த்துவது புலனாகின்றது.

**சிவபோகசாரம்**

தருமபுர ஆதீனத்து ஆதி குரு முதல்வர் 'குருஞானசம்பந்தர்' என்பவரால் இயற்றப்பட்டது சிவபோகசாரம் எனும் இந்நூலாகும். இந்நூல், 139 வெண்பாக்களைக் கொண்டதாக அமைகிறது. திருமுறையை ஓதுதல், தலங்களைத் தரிசித்தல், போலி குருமார்கள் நிலை, பொய் பேசுதல் கூடாது, நீதியை நிலைநாட்டல் என்பவற்றை விளக்குவதாக இந்நூல் அமைகின்றது.

காரண அவத்தைகளுள், மலங்கள் முழுவதும் நீங்கிய சுத்தாவத்தையில் திகழ்ந்து, அதனை உணர்ந்தால், சிவானந்தமாய் விளங்கக்கூடிய பரம்பொருளை அடையலாம் என்று குருஞானசம்பந்தர் கூறுகின்றார். இதை,

**"சுத்தவத்தை நாடியிடுஞ் சுத்த இராப்பகலா**

**மெத்தவத்தை நாடி விடுவையேல் – சுத்தவத்தை**

**தானாய் இரண்டுந் தவிர்த்த சிவானந்த**

**வானாவை நீயே மதி"** **(சிவபோகசாரம். பாடல் எண்.40)**

எனும் பாடலால் அறியலாம். எனவே, ஆன்மா சுத்தாவத்தை நிலையை அடைந்து பரம்பொருளைப் பற்றக் கூடிய நிலையினைச் சிவானந்தம் எனும் சொல்லால் உணர்த்துவது இங்கு அறியலாகின்றது.

**சொக்கநாத கலித்துறை**

தருமையாதீன ஆதி குரு முதல்வர் குருஞானசம்பந்தர் என்பவரால் இயற்றப்பட்டது சொக்கநாத கலித்துறை எனும் இந்நூலாகும். இந்நூல் 11 கட்டளைக் கலித்துறை பாடல்களைக் கொண்டதாக அமைகிறது. திருவாலவாய் தலத்தில் எழுந்தருளியிருக்கும் சொக்கநாதப் பெருமானைப் போற்றுவதாக இந்நூல் பாடல்கள் அமைகின்றன. இந்நூலாசிரியர் சொக்கநாதப் பெருமானிடம் தான் வேண்டியதைத் தர வேண்டும் என்ற அமைப்பில் இயற்றியுள்ளார்.

உன்னை வணங்கும் அடியார்களுக்கு எல்லாம், என்றும் ஆறாத பிறவிப் பிணி நோயை நீக்கி, பேரானந்தமாகிய சிவானந்தத்தை வழங்க வேண்டும் என்று, ஆலவாய் அண்ணலான சொக்கநாதப் பெருமானிடம் ஆசிரியர் வேண்டுகிறார். இதை,

**"ஏறாத விண்ணப்பம் கூறாநின் றேன்அஃதே தெனிற்கேள்**

**மாறாம லிந்த மகாலிங்கந் தன்னின் மகிழ்ந்திருந்தே**

**ஆறாப் பவத்துய ராற்றிச் சிவானந்தம் அன்பர்க்கென்றும்**

**பேறாக நல்குதி மாமது ராபுரிச்சொக்க நாயகனே"**

**(சொக்கநாத கலித்துறை பாடல் எண்.5)**

எனும் பாடலில் அறிய முடிகின்றது. பிறவிப்பிணி எனும் நோய் நீங்கி, ஆன்மா அடையக்கூடிய ஆனந்த நிலையைச் சிவானந்தம் எனும் சொல்லால் ஆசிரியர் குறிப்பிடுவது இங்கு நோக்கத்தக்கது.

**சொக்கநாத வெண்பா**

தருமபுர ஆதீனத்தைத் தோற்றுவித்த குருஞானசம்பந்தர் என்பவரால் இயற்றப்பட்டது சொக்கநாத வெண்பா எனும் இந்நூல் ஆகும். இந்நூல் 100 வெண்பாக்களைக் கொண்டதாக அமைகின்றது. ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் 'சொக்கநாதா' என்று முடிவதால் சொக்கநாத வெண்பா எனும் பெயரைப் பெற்றுள்ளது. மதுரை மாநகரில் வீற்றிருக்கின்ற சோமசுந்தரப் பெருமானைப் போற்றிப் பாடுவதாக விளங்குகின்றது.

தீமைத் தருகின்ற ஆசை கெட்டு உன் சிவானந்தத்தை வழங்க வேண்டும் என்று,

**"தீதாம் அவானந்தச் செய்மதுரை வாழ்வேந்தா**
**நாதா சிவானந்தம் நல்குவாய் – வேதா**
**சிரகரா நித்தா திரபரதா சுத்தா**
**அரகரா சொக்கநா தா"** **(சொக்கநாத வெண்பா பாடல் எண்.63)**

எனும் பாடலில் ஆசிரியர் கூறுகின்றார். எனவே, ஆன்மாக்குத் தீங்கு தரும் செயலாக ஆசை இருக்கின்றது எனவும், இந்த ஆசையில் இருந்து விடுபட்டால் கிடைக்கும் ஆனந்தம் சிவானந்தம் எனவும் இங்கு ஆசிரியர் கூறுவது புலனாகின்றது.

**முடிவுரை**

ஆன்மா வினைப்பயனை நுகர்வதற்கு ஊனுடம்பில் கலந்து நிற்கின்றது. இந்த வினைப்பயன் இருவினையொப்பு என்ற நிலையினை அடைகின்றது. இருவினையொப்பில் இருந்து, ஆன்மா மலபரிபாகம் அடைந்து, இறைவன் திருவடியில் ஒன்றாகின்றது. இந்நிலையே சிவானந்தம் என்பது ஆகும். இந்தப் பேரானந்த நிலை எந்த வழிகளில் எல்லாம் ஆன்மாப் பெறுகின்றது என்பதைப் பண்டார சாத்திரங்களின் ஆசிரியர்கள் விளக்குவதை அறியமுடிகின்றது. எனவே, ஆன்மாத் தனக்குரிய பக்குவநிலையை அடைந்து இறைவனொடு ஒன்றாகும் போது சிவானந்தம் எனும் நிலையை அடைகின்றது என்பதை இக்கட்டுரையின் முடிவாக விளங்குகின்றது.

**துணைநின்ற நூல்கள்**

1. இளம்பூரணர்(உரை), தொல்காப்பியம் (2009), சாரதா பதிப்பகம், சென்னை.
2. குருஞானசம்பந்தர், சிவபோகசாரம் (1953), தருமையாதீனம், மயிலாடுதுறை.
3. குருஞானசம்பந்தர், சொக்கநாத கலித்துறை (1953), தருமையாதீனம், மயிலாடுதுறை.
4. குருஞானசம்பந்தர், சொக்கநாத வெண்பா (1953), தருமையாதீனம், மயிலாடுதுறை.

5. சிதம்பரநாத தேசிகர், தசகாரியம் (1962), துறைசையாதீனம், மயிலாடுதுறை.
6. சிவஞானசுவாமிகள், பஞ்சாக்கரதேசிகர்மாலை (1965), துறைசையாதீனம், மயிலாடுதுறை
7. சோ.ம.இளவரசு(உரை), நன்னூல் (1965), கழக வெளியீடு, சென்னை.
8. முத்தி பஞ்சாக்கர மாலை(1965) , துறைசையாதீனம், மயிலாடுதுறை.

## References

1. Gurugnanasambanthar, Sivaboga Saaram(1953), , Dharumaiyatheenam, Mayilaadudurai.
2. Gurugnanasambanthar, Chokkanaatha Kaliththurai(1953), Dharumaiyatheenam, Mayilaadudurai.
3. Gurugnanasambanthar Chokkanaatha Venba(1953), Dharumaiyatheenam, Mayilaadudurai.
4. Sithambaranaatha Desikar, Dasakaariyam(1962), Thuraisaiyatheenam, Mayilaadudurai.
5. Ilambooranar, Tholkaapiyam(2009), Saaradha Pathippagam, Chennai.
6. So.Ma.Ilavarasu ,Nannool(1965), Kazagam Publication, Chennai.
7. Sivangnanaswamikal, Panchaakara Desikar Maalai(1962), Thuraisaiyatheenam, Mayilaadudurai.
8. Muthi Panchaakara Maalai(1962), Thuraisaiyatheenam, Mayilaadudurai.

Commented [DM1]: MLA எட்டாம் பதிப்பு முறையில் இருத்தல் வேண்டும்

### தமிழில் இக்கட்டுரையின் மேற்கோள்

**சிவானந்தம்.சா “பண்டார சாத்திரங்களில் ‘சிவானந்தம்’ எனும் பதமும் பொருளமைதியும்”** புலம் : பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், தொகுதி 4, இதழ் 2, ஏப்ரல் 2024, பக். 60-66

### Cite this Article in English

**Sivanantham**. **S, “ Name And Meaning of Sivanandha in Bandara Satras”** Pulam: International Journal of Tamilology Studies, Vol.4 Issue 2, April 2024, pp. 60-66